www.tamilarangam.net



# தலைவன் யார்?

ப.வி.ஸ்ரீரங்கன்

பாகம்-1



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 – 5 |
| 1/ தலைவன் என்ற தகுதி | 6 – 8 |
| 2/ தலைவனும் எண்ணமும் | 9 – 11 |
| 3/ முடிவும் விளைவுகளும் | 12 – 14 |
| 4/ தலைவனுக்கோர் தன்மானம் | 15 – 19 |
| 5/ தலைவனும் அவன் சுடாரமும் | 19 – 23 |
| 6/ சிந்தனை தலைமையும் அதன் சக்தியும் | 23 – 27 |
| 7/ அச்சம் [புதுக்கவிதை] | 28 |
| 8/ அபிப்பிராயமும் தலைவனும் | 29 – 32 |
| 9/ தலைவன் அவன் யார்? | 33 – 37 |
| 10/ தமிழீழ கோஷமும் தலைவர்களும் | 37 – 39 |
| 11/ முதலாளித்துவங்கள் [புதுக்கவிதை] | 40 |


# தலைவர் யார்?

ப. வி. ஸ்ரீரங்கன்

வெளியீடு
— மார்கழி 1988 —
மேற்கு ஜெர்மனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முன்னுரை

வணக்கம்!

இது என் இரண்டாவது தொகுப்பு!

தலைவன் யார்? இது என்ன கேள்வி தலைமையேற்றிருக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு தலைவன் இனம் காட்டுகிறீரா? என்று கேட்க வேண்டாம்!

தலைவன் என்ற தனி மனிதனின் எண்ணங்களின் ஓட்டங்களையும் முடிவுகளையும் பற்றி ஆராய்ந்த போது அவன் யார்? என்று என் மனதில் கேள்வியாக விரிந்தது அந்தக் கேள்வியே தலைவன் யார்?

இது பற்றி நான் பெற்ற விடையே இந்நூல். தற்போது இந்நூல் 'பாகம் I' வெளிவருகிறது. பின்பு இந்நூலில் குறிப்படாத பலவற்றைச் சேர்த்து விரிவாக பாகம் II வெளிவரும்

தலைவர்கள் நமக்கு உதாரண புருஷர்களாக, எடுத்துக்காட்டாக, தியாக சீலர்களாக, அப்பழுக் கற்றவர்களாக இருக்க வேண்டும். இவ்வித அளவு கோலுடன் ஈழத்து தலைவர்களை ஆராய்ந்தோமானால், யாருமே இந்த அளவு கோலுக்குள் அடங்கவில்லை.

சாதிகள் மட்டுமே கணித்து தலைவன் தெரிந்தெடுப்பன் என்றால் ஒருவர் அடங்குவர். மக்கள் அபிமானத்தை மட்டுமே எண்ணித் தலைவன் சீர்தூக்கிப் பார்ப்போம் என்றால், யாருமே அடங்கவில்லை என்பதே உண்மை!

காலம் காலமாக தமிழர்கள் குட்டிச் சுவராக்கி தம் பதவிகளைக் காப்பாற்றிய 'முதலீட்டு மன்னர்களின்', தலைவர்கள். ஈழ மக்களின் விழிப்புணர்வால் தூக்கியெறியப் படுவதற்கு முன், இதுதாம் ஏந்திய கனிதர்களின் செயற்பாட்டால்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்கள அரசினால், பதவி பறிக்கப்பட்டு விரட்டப்பட்டார்கள். இப்போதுள்ள தலைமை ஆயுதம் தரித்த தமிழ் இளைஞர்களிடம், மாறியது. இளைஞர்கள் சிங்கள சிப்பாய்களை அடிக்கும் மோதலும் இவற்றை உண்டாக்கினார்கள். இவர்கள் தம் திறமைகளைக் காட்டினார்கள்.

மக்களும் இவர்கள். தீர்க்கமாக சிந்திக்கக்கூடியவர்கள். கற்பனையும் கலையும் நிறைந்தவர்கள். ஆஹா! இதோ பார் எழுந்தது விடுதலைப் போர்! பொடியன்கள் தமிழ் ஈழம் காண்பார் என்று இறுமாந்திருந்தனர்.

இளைஞர்கள் சாமானிய மனிதர்களல்ல!
அசாதாரண பேர்வழிகள்! அசாதாரண தலைமைகள்!
ஆனால் நடந்தது என்ன?

கட்டமைக்கும் திறனும், கல்வியும். முடிவெடுக்கும் அறிவும் தலைவர்களுக்கு முக்கியமானது. இது இளைஞர்களிடம் நிறைய இருந்தது. அத்துடன் சொந்தப் புகழில் மாந்தி மறக்கும் ஜெனசங்கமும், வஞ்சம் தீர்ப்பதில் எதிரியை நண்பர்கள் கொலைத்துக் கட்டுவதில் உருக்கம், செய்தது சேர்க்கும் சுயநலமும் நிறைய இருந்தது

இதனால் பெரிதாக இயக்கம் தொடங்கப்பட்டது, அன்ன குறிக் கோளுக்காக துப்பாக்கி ஏந்திப் போரா டுகிறோம், எம் போராடி மக்களைப் பறிகொடுத்தோம் என்ற நோக்கமின்றி கிடைத்த அடிப்படையெல்லாம் காற்றோடு பறக்கவிட்டு தடம் புரண் டார்கள்!

பதவி அதிகாரம், கேவலம் புகழும் பெரிதாகப் போய்விட்டது. இதன் விளைவாக கொலைச் சோதனைகள் உட்கட்சிக்குள்ளிருக்கும் தலைமைகள்



... முயற்சி, அப்பாவி மக்களின் கொலை அழிவு, ஈழத்தில் இயக்க சர்வாதிகாரம் என்பன விளைவுகள் நிகழ்ந்தது; நிகழ்கின்றது!

ஒரு தலைமைக்கு வேண்டியது அடிப்படை கட்டுப்பாடு. இவர்களிடம் கட்டுப்பாடு போய்விட்டது. தலைவர்களுக்கும் தளபதிகளுக்கும் கட்டுப்பாடு அடிப்படைக்கு மேல் தேவையானது; தன்னலம் கருதாத பொது நலம். அது இவர்களிடம் பஞ்சாகப் பறந்து போய்விட்டது.

இதன் விளைவாக விடுதலைப் போருக்கு ஏற்பட்டது கறை. மக்கள் நம்பிக்கை இழப்பு. இத்துடன் போயிருந்தா லும் பரவாயில்லை. இன்னும் பல கொலைகள், கொள்கைகள், சகோதர இயக்க மோதல்கள் தொடர்கிறது. சிவகுமாரன் தங்கத்துரை போன் றோர் ஏற்றிச் சென்ற விடுதலைத் தீபத்தை - இம் பெரும் தலைவர்களும் அணைத்துப் புகை சூழச் செய்து விட்டார்கள். இதற்காக முதலில் பத்மநாபாவையும், உமாமகேஸ்வரனையும் குற்றக் கூண்டில் ஏற்ற வேண் டும்.

உலக சரித்திரத்தில் இவர்களும் தமிழ் ஈழம் என்றோ அமைந்திருக்க வேண்டிய உன்னத ஸ்தானத் தை இவர்கள் இழந்து, தமிழ் மக்களின் நம்பிக்கைக்கும் வேட்டு வைத்து விட்டார்களே! இதற்கு இந்த இருமூர்த்திகளும் தான் பொறுப்பு என்று குற்றம் சுமத்துகின்றேன்!

செல்வநாயகம் போட்ட தனிநாட் டுக் கோரிக்கை த.வி.கூ வால் முடியாது. இளைஞர்கள்தான் செய்வார்கள். அவர்களின் சக்தியை ஒன்றுபடுத்தி மாபெரும் வெற்றி பெறுவோம், என்று நம்பியிருந்த தமிழ் மக்களை ஏமாற்றி விட்டார்களே! இலட்சியத்தை காற்றில் பறக்க விட்டு விட்டார்களே!

இந்த ஈனத்தனத்தால் ஈழத்தில் உரிமைகளுக்கான போராளி இளைஞர்கள் ஏமாற்றப்பட்டார்கள். இலட்சக்கணக்கான தமிழர்களின் வாழ்வு நாசமாகியது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று எங்கு பார்த்தாலும்...
தமிழர்கள் பொருமுகிறார்கள்!
குமுறுகிறார்கள்!

பாசிசத்தின் சுவடிச் செருக்கும் தத்துவத்தால் L.T.T.E அழிந்தது. வசு தேவா கண்ணன் போன்றோரின் வழிகாட்டிய முட்டாள் தனத்தால் P.L.O.T தவிடுபொடியாக தகர்ந்தது. "மார்க்ஸிச லெனினிச" தத்துவ வித்தகர் இரத்தின சபாபதியின் குத்துக் கரணத்தால் E.R.O.S இரண்டாகியது. ஸ்ரீ சபாரெத்தினத்தின் கொலையால் TELO "சிவா" வாகியது! சிதறியது!

வரதராஜப் பெருமாளின் வரண்ட தத்துவத்தால் E.P.R.L.F இனர் தமிழர்களின் மார்பில் ஆப்பு அறைக்கிறார்கள். எனவே எமது இந்நாளில் பல இடங்களில் இவர்களின் ஈனத்தனங்களை இனம் கண்டு கொள்ள முடியும்!

அறிஞர்கள், படித்தவர்கள், புத்திசாலிகள் நிறைந்த சமுதாயம், நம் தமிழ்ச் சமுதாயம். இதுவே இவர்கள் ஈழத்து அரசியலில் தனியொரு பங்கு பெற்று ஈழப் போராட்ட வடிவத்தை செப்பனிட வேண்டும் என்பது என் ஆசை! இந்த கனவு நனவாகுமா? இல்லையெனில் அது ஈழத்தின் துர்அதிஷ்டம்

ஈழமக்களுக்கு பட்ட கடகை ஆயுத முனையிலும் அறியாமை முனையிலும் வரும் தலைவர்கள், மீண்டும் தர மனிதர்களாகவே இருக்கின்றது. இந்த பரிதாப நிலை மாறவேண்டும்!

இக் கட்டுரை நூலைப் படிக்கும் வாசகர்கள் நாட்டு நலனில் அக்கறை கொள்ள வேண்டும். அறிஞர்களுக்கு, படித்தவர்களுக்கு பக்கத்துணையாக நின்று "அராஜக அரக்கத்துக்கு" சாவு மணி அடிக்க வேண்டும். அதுவே நம் நாட்டின் முன்னேற்றத்தின் பலகை அமையும்.

பொது வாழ்க்கை என்ன கேலிக் கூத்தா? இல்லை ஆயுதத் தலைமைகளின் பரம்பரைச் சொத்தா? கூத்தாடிக் கும்மாளம் அடிக்க இல்லை ஒருநாளும் ...விட முடியாது! ஈழத்து நிலைமை நோக்கும் போது படித்தவர்கள், பண்பாளர்கள், சிந்தனையாளர்கள் துப்பாக்கிப் பயம் ஆட்டிப்படைக்கிறதா? என்று சந்தேகமாக இருக்கின்றது.

பயத்தை உதறித் தள்ளுவோம்!
உரிமை துச்சமென மதித்துப் போராடுவோம்..
அராஜகத்துக்கு எதிராக!

வழமைபோல எனக்கு உதவியாளராம் என் கவிஞ நண்பன் காந்தேசன் கோவிந்குமாருக்கும், இனிய நண்பன் அருமை நாயகத்துக்கும், இதைப் படிக்கும் வாசகர்களுக்கும் என் நன்றி!

SCHAFHOF STR. 32
8500, NÜRNBERG 10
WEST GERMANY
01.11.1988

அன்புடன்
ப.வி. ஸ்ரீரங்கன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலைவன் என்ற தத்துவம்

(1)

உலக நாடுகளிலுள்ள அறிஞர்கள் புரட்சிவாதிகள், அரசியல் நிபுணர்கள் எல்லோரும் தமிழர்கள் அறிவாளிகள், படித்தவர்கள், வீரமுள்ளவர்கள் என்று எழுதுகிறார்கள். கூறுகின்றார்கள். எம் நாட்டின் இளம் ஆயுதத் தலைமைகள் தமது திறமையை காட்டி உலகத்தின் பார்வையை தமிழர்கள் பக்கம் திருப்பியுள்ளார்கள். இப்படி இன்னொரு சாமானிய தமிழனும் நாளாந்தம் புலம்பிக் கொண்டு திரிவதையே தொழிலாகக் கொண்டு செயல்படுகிறேன்.

காலகாலமாக ஈழத்துத் தலைமைகள். தமிழர்கள் கவலைகளில் மிதக்கவிட்டார்கள். கலவரங்கள் பல ஈழமக்களை இருவேறு முவ்வேறு பிரிவுகளாக பிரித்தாண்டார்கள். தங்கள் சுயத்திற்காக தமிழர்களைத் தாழ்த்தி தலைமைப் பீடம் பெற்றார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் மிதந்தார்கள்! தாழ்த்தியவர்கள் தடம்புரண்டார்கள்.

தமிழர்கள், கல்வியில் கழிவான நிலையிலில்லை. தமிழர் தலைமைகள் தகுதியில் - திறமையில் தம்மை உயர்ப்பதில் தூரமான தலைவர்கள். தாம் கொண்ட துன்பங்கள் தம் சார்ந்த மக்களுக்கு பரிசாக அளித்துவிட்டு, தம் தலைமைப் பீடத்தை கெட்டியாக பிடித்துக் கொள்கிறார்கள் - கொண்டார்கள்.

சாதாரண மனிதன் சூழ்நிலைக்கேற்றவாறு தன்னைத் தயார்ப்படுத்தி திறமைகளை இனங்கண்டு அவற்றை ஆக்க சக்தியாக்கி, தன் நிலையை எப்படி உருவாக்குகிறான் 'தலைவன் என்ற தகுதிக்கு' என்று நான் தினமும் சிந்திப்பதுண்டு. ஈழத்தமிழரை ஒருங்கிணைத்து, அரசியல் ரீதியாக தலைமைதாங்கும் சக்தியை சில இளைஞர்கள் திறனைப் பெற்றார்கள். இவர்களெல்லோரும் தம்மைத் தலைவர்களாகக் காட்டிக்கொண்டாலும்...



காலம் இவர்களைக் குப்பைத் தொட்டிக்குள் 'நாளாந்தம்' வீசிக்கொண்டிருக்கிறது. தமிழர்களை இலங்கையில் வழிநடத்திய முன்னோர்களும் சரி, தற்கால தலைமைகளும் சரி, துணிவுள்ளவர்களாக - ஆராய்ந்திய திறமையுள்ளவர்களாக - சமயோசித புத்தியுள்ளவர்களாக நம்பிக்கை வளம் மிக்கவர்களாக இருக்கிறார்களா? என்று நான் என்னையே கேட்டுக் கொள்வது வழக்கம்.

ஏனைய தேசத்தில் நடந்த நடக்கின்ற சீர்கேடுகள், சீர்தூக்கிப் பார்க்கும் போது, உண்மை அப்படி எண்ண வைக்கிறது. இவர்களின் இந்த செயலால் ஈழத்தமிழர்கள் வாயிலாக ஒரு நம்பிக்கையற்ற ஒருமித்த - நிரந்தரமான கருத்து தோன்றுகிறது. 'தலைவர்களின் வழிநடத்தல் பிழையானதும், அரசியல் ஞானமற்றதாயும் இருந்தும் இவ்வித கவர்ச்சியான போராட்டம் திசை மாறிவிட்டது. இந்த மக்கள் கருத்தை முற்றுமுழுதாக மறுக்க முடியாது.

உலக சரித்திரத்தை புரட்டிப் பார்ப்போமானால் காலமென்ற சுழல் வாளினால் கூறாக்கப்பட்ட புத்திசாலித் தலைவர்கள் தடம் புரண்ட சரித்திரமும் உண்டு - தப்பிய வீரமும் உண்டு.

ஐரோப்பாவைக் குழி தோண்டாமலே புதைத்து விடுவதாக கங்கணம் கட்டிய, ஜேர்மனியர்களின் புத்தி ஆதிக்க வெறியினால் அழிந்தது.

வெறும் வெற்றுப் பேச்சுப் பேசிய 'சர்ச்சிலின்' புத்தி பிரிட்டிஷ் பேரரசையே வெற்றிக்கிட்டுச் சென்றது. உலகின் விசிய வையகத்தை ஆட்டிப் படைத்த முடியரசர்கள் பல முடியின் சுழிய சீற்றத்தால் முடியிழந்த வரலாறும் உண்டு.

காலமென்ற கடிவாளத்தில்தான் சரித்திர குதிரை பூட்டப்பட்டிருக்கிறது. குதிரை வேகமாக செல்லும் போது கடிவாளம் தன் கடமையைச் செய்ய ஆரம்பிக்கும். தலைவன் என்ற தனி மனிதனின் முடிவுகள் நாணயக் குற்றியின் இரு பக்கம் போன்றது. ஒரு பக்கம் முடிவும், மறுபக்கம் தலையுமுண்டு. என் வாழ்க்கை வரலாற்றைச் சீர்படச் செய்யும் இவற்றையே பாருங்கள். ஒரு பக்கம் நன்மையும் மறு பக்கம் தீமையும் ஒருங்கே பெற்றதுதான் அது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உழைப்புக்கும் உயர்வுக்கும் பந்தத்தின் பரிசாக தருவோம் என்றது முடியரசு. பந்தத்தினிலே பலமாக பெற்று பிறந்ததுதான் சமஉடமைத் தத்துவம்:

இவை யெல்லாம் தனிமனிதனின் முடிவுகளால் அறுவடை செய்யப்பட்டவை. தலைவன் என்ற தகுதிக்கு மனம் மையமண்டபமாக அமைகிறது. அங்கிருந்து சிந்தெழுகின்ற ஒவ்வொரு நினைவுகளும், தனிமனிதனின் நம்பிக்கைகளினால் சிறப்பும் பெறுகின்றது. இவை செயல் வடிவம் பெறும் போது நன்மை தீமை என்ற தத்துவம் பிறக்கின்றது. அதுவரைக்கும் திறமைவாய்ந்தவன் புத்திசாலியானவன் என்று தாலாட்டிய கைகள் தலைவனைக் கொய்துவிடுவதும் சிதையை சிதைப்பதும் சகஜம்.

இந்த நியதிக்காளாகாத தலைவன் உலகில் யாருமில்லை. மெய் வருந்தி 'காலனித்துவ அடிப்பணி'மைக்கு முற்றுவைத்த காந்திஜி கடைமடையனின் துப்பாக்கிக் குண்டு பட்டு பிணமானவர்.

தூர்நாற்றமடிக்கும் அதிகாரச் சாக்கடையில் அள்ளப்போது நெளிகிற புழுவும், தன்னிலே அந்தச் சாக்கடை நீரில் பலியாக்கியது. மூடிவிடப்பட்ட ஐரோப்பிய சந்தைக்கு இத்தாலிய மாலுமி 'கொலம்பஸின்' தனி மனித சிந்தனை புதிய ஒரு நாட்டையே பெற்றுக் கொடுத்தது.

ஆக தலைவன் என்ற தகுதிக்கு அவன் நுட்பமான அறிவு வழிகாட்டி அதன் மைய மண்டபமே மனம். அதிலெழும் எண்ணங்களே அவன் வாழ்வமைக்கிறது. அந்த எண்ணங்களுக்கேற்பவே தலைவன் உருவாகிறான்.

வீரம் விலைபோனதில்லை விவேகம் தன்னிச்சை வராவிட்டால், தூக்கிய துப்பாக்கிகளும் தோட்டாக்களும் போதாது. அறிவாயுதம்! அறிவாயுதம்! அது தேவை. எங்கே நாம் செல்கிறோம்? எதைத் தேடுகிறோம்? எம் பாதை எது? ஆயுதத்தை தூக்கியவர்களோ அழிவையும் ஆக்கினைகள். அவர்களிடம் அறிவெங்கே அறிவெங்கே? அப்பழியை அகற்றிவிட்டதா எல்லா ஆயுதம் ஏந்திய வீரர்களா?

ஆயுத ஆத்மாக்களோ அசிங்கங்கள் பதில்? சிந்தியுங்கள் சற்று. நமக்கு வேண்டியது 'விடுதலை' அல்லவா படுகொலைகள் அல்லவே!



# தலைவனும் எண்ணமும் ②

எண்ணங்களுக்கேற்ப மனிதன் வளருகிறான். நாட்டின் நிலையும் எண்ணங்களுக்கேற்ப, சமுதாயம் மலர்கிறது. நல்ல எண்ணங்களையும், கொள்கைகளையும் உருவகப்படுத்தி தலைவன் சமுதாயத்தை தன் நோக்கிற்கேற்ப அமைத்துச் செல்கிறான். அல்லது மக்களின் ஆசைகளுக்கேற்ப வழி நடத்திச் செல்கிறான்.

'தலைவர்கள்' பிறப்பதாகச் சொல்கிறார்கள். சில மாதங்களுக்கு முன் சாதாரண மனிதனாயிருந்தவன் சூழ்நிலையால் தன் சுயமுயற்சியால் வளர்ச்சியால் தலைவன் எனப் போற்றப்படுகிறான். ஞானமுள்ளவன் மேதை என பாராட்டப்படுகிறான்.

1917ம் வருடம் நமது இலங்கையில் பிறந்த M.G. ராமச்சந்திரன் தமிழகம் சென்று வயிறு வளர்க்க முடியாது திண்டாடினார். அந்த தனி மனிதன் பின்னாளில் தன் சுயமுயற்சியினால் நல் எண்ணங்களால் தெளிவான கொள்கையினால் தமிழ்நாட்டையே கட்டியாண்டவர். அவர் அந்த எண்ணங்களை சினிமா மூலம் பரப்பினாரோ அதே எண்ணங்களை அறுவடை செய்து தமிழக தலைவரானார்.

இங்கிலாந்தில் வக்கீலுக்குப் படித்து, தென்னாபிரிக்காவில் வாழ்ந்த மோகன்தாஸ் கரம்சந் காந்தி அங்கு இந்திய கறுப்பின மக்களை தென்னாபிரிக்க வெள்ளையின அரசு கேவலமாக நடத்துவதைக் கண்டு குமுறினார் ஆனால் அவரால் போராட முடியவில்லை. அந்த வேளையில் காந்திஜிக்கு அவர் நண்பர் மூலமாக ஒரு நூல் கிடைக்கிறது. 'ஜோன் ரஸ்கின்' எழுதிய கடையருக்கும் கடைத்தேற்றம் [UNTO THIS LAST] என்ற நூல்தான் அது!

கதைப்படித்த பின்புதான் காந்திஜிக்கு புதிய பலம் உருவாகியது. புதிய எண்ணங்கள் உருவாகின...

தமிழ்த தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net



..அந்த எண்ணங்கள் அவரை வழிநடத்தின. எண்ணங்களாய் உருப்பெற்றன. இதனால் தீவிர கொள்கை வாதியானார். இவரின் இந்த எண்ணங்கள் - கொள்கைகளே இந்தியாவில் காலனித்துவ ஆட்சிக்கு - ஆதிக்கத்துக்கு சமாதி கட்டியது.

பார்த்தீர்களா எண்ணங்களின் வலிமையை! அன்றைக்கு மோகன்தாஸ் காந்தி எடுத்த முடிவுதான் இன்றைக்கு இந்தியாவும் விடுதலைக் காற்றை சுவாசிக்கிறது. அந்த எண்ணங்களின் முடிவிலே பிறந்ததுதான் காந்தியக் கொள்கைகளும் சர்வோதயங்களும். இந்த காந்தியக் கொள்கைகளுக்கான கொள்கைகள் கருவான இடம் ஃபினிக்ஸ் பண்ணைதான்.

இதே போன்று பல தேச வரலாறுகள் மாற்றிய தலைவர்களின் எண்ணங்களும் உண்டு.

போலந்துடன் வீண்பழி சுமத்தி டாங்கிகள் சகிதம் போரிட்டான் அடோல்ஃப் ஹிட்லர். பிரான்சும், இங்கிலாந்தும் எச்சரித்தும் இதைப் பொருட்படுத்தாது போரிட்டான் ஜெர்மனியர்களின் தலைவன். முடிவில் 1939ல் உலகப் போர் மூண்டது. அமெரிக்கா முதல் ஜப்பான் வரை சென்ற போர் கடைசியில் 'ஜப்பானின்' இரு பெரு நகரங்களான நாகசாகி - ஹிரோஷிமா நகரங்களையும் பல கோடி மக்களையும் பூண்டோடு பொசுக்கியது.

1917ம் வருடம் மாவீரன் 'லெனின்' நடத்திய போர் உழைப்புக்கும் உரிமைக்கும் மகுடம் சூட்டிய அந்த 'போல்ஸ்விக்' புரட்சி பாட்டாளிகளுக்கான ஆட்சியை நிறுவியது ருஷ்யாவில். இதன் பலனாக சோவியத் ருஷ்யா இன்று மாபெரும் வல்லரசாக விளங்குகின்றது.

பாட்டாளிகள் நாடாளப் புறப்பட்டதும் முதலாளித்துவ முதலைகளாகிய - சுரண்டல் பெருச்சாளிகள் மூச்சு திணறினார்கள். பொதுவுடமைத் தத்துவம் உலகம் பூராவும் வீறு நடை போடுகிறது. பொருளாதார மேதை 'கார்ல் மார்க்ஸின்' [illegible]மான 'எண்ணம்' இன்று...

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்



..உலகத்துக்கு வெளிச்சம் கொடுத்தது. இதற்கு அவர் பெற்ற பரிசு. வறுமை, குடும்பம் பசியினால் வாடி இருந்தது. தன்னையும் தன் குடும்பத்தையும் உலகுக்கு 'பலியாக' ஆக்கினார் தன் சிந்தனையால்...

ஆக தனி மனிதர்களாக இருந்தவர்களின் சிந்தனை - எண்ணங்கள் அவர்கள் வழிநடத்திச் சென்றது. அந்த எண்ணங்களோ உலக சரித்திரத்தில் இடம் பெற்ற மகத்தான நிகழ்ச்சியாகவும் இடம் பிடித்துள்ளது. எண்ணங்களின் முடிவுகள் நன்மைகளையும் தீமைகளையும் மனிதவரலாற்றில் காட்டி நிற்கிறது. இந்த எண்ணங்களின் முடிவுதான் வரலாறு வெள்ளமாக ஒரே திசையை நோக்கி ஓடிய வண்ணமிருக்கிறது.

இதன் ஓட்டத்தை நிறுத்தியவருமில்லை - திருப்பியவருமில்லை. மனிதர்களோ எண்ணங்களை உருவாக்கினார்கள், அந்த எண்ணங்களோ அவர்கள் வாழவைக்கிறது. தனி மனிதனின் நல்லெண்ணங்கள்.. அவன் குடும்பத்தை புதிய நோக்கில் உருவாக்கும். தலைவனின் எண்ணங்கள் புதிய சமுதாயத்தை நிறுவ வழிவகை செய்யும் அல்லது அழிக்கும்.


ஆகவே நிகழ்ச்சிகள் தாமாக உருப்பெறுவதில்லை தனி மனிதர்களின் எண்ணங்களின் முடிவே நிகழ்வாகின்றது. இந்த முடிவுகள் மனித குலத்துக்கு தேவை - ஆனால் எந்தவித முடிவு? இதை அடுத்த அத்தியாயம் நாம் பார்ப்போம்.

துன்பப்படாதவன் வாழவேயில்லை!
தோல்வியுறாதவன் முயலவேயில்லை!
விம்மி அழாதவன் சிரிக்கவேயில்லை!
சந்தேகப்படாதவன் சிந்திக்கவேயில்லை!

ஒரு கவிஞன்.

www.tamilarangam.net


# முடிவும் விளைவுகளும் - 3



தம் கைகளில் குவிந்து வைத்திருக்கும் பூதாகரமான அதிகாரங்கள் தலைவர்கள் எந்த வகையில் மக்களுக்கு சேவை செய்யப்போகிறார்கள்.

போர்முனையிலா?

ஏர்முனையிலா?

கலாச்சார மேம்பாட்டிலா?

கல்வி வளர்ச்சியிலா?

யுத்த தளபாடம் சேர்ப்பதிலா?

தொழில் உருவாக்குவதிலா? யார் அறிவார்? தலைவன் என்ற தனிமனிதன் முடிவுகள் தயார் செய்துவிட்டு ஒப்புக்கு அபிப்பிராயம் கேட்கும் காலமிது! ஜேர்மானிய மக்களின் உழைப்புக்களெல்லாம் யுத்த தளபாடங்களாகவும் மக்கள் செல்வத்தை காட்டுமிராண்டி இராணுவமாகவும் போர்முனையில் அழித்தான் நாசிச் அடோல்ஃப் கிட்லர்.

அறிஞர் ஸ்டாலின் முடிவு ருஷ்ய மக்களின் உழைப்பையும் நாட்டின் கனிவளங்களையும் கூட்டுப் பண்ணை முறையில் விவசாயத்திலும் கல்வி வளர்ச்சியிலும் பாதுகாப்புக்கும் சேவை செய்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றினர்.

எகிப்து நாட்டு அரசர்கள் தம் அதிகாரங்களையெல்லாம் நாட்டு குடி மக்களுக்காக விவசாயத்தில் சேவை செய்தார்கள் பயன் நைல் நதி விவசாய உற்பத்திக்கு உபயோகமானது. எகிப்திய தோட்டங்கள் கனிகளையும் காய்களையும் அள்ளித் தந்தது. மக்களின் உழைப்பும் நாட்டில் அதிசயிக்கத் தக்க பிரமிட்டுகளையும் கட்ட உதவி புரிந்தது. இன்று உலகமே அதிசயப்படும் "பிரமிட்டுக்கள்தாம்" அவை..

இந்தியா இன்று, தன் கையில் குவிந்திருக்கும் அதிகாரத்தை யுத்தம் சம்பந்தமான தளபாடங்களுக்கும், போர் முனையிலும், உலகம் சுற்றுவதிலும் சேவை செய்கிறார் மதிப்புமிக்க ராஜீவ் இளவரசன்.

இலங்கை மக்களின் செல்வங்களை, தம் மக்களையே பலிகொடுப்பதற்கும், சிங்கள இராணுவத்தை இறக்கி போர் முனையில் சேவை பண்ணுகிறார். புத்தனின் அருமைச் சீடன் J.R ஜெயவர்த்தன

ஈ.ழத்தமிழரின் திறமைகளையும் கல்வியையும், உழைப்பினையும் இலங்கைக்கு ஈன் பங்கு போட்டு சிதைப் பதுமில்லாமல் ஐரோப்பிய நாடுகளில் அஞ்ஞாத வாசம் புரியும் தமிழர்களிடம் பெறும் செல்வங்களையும் தம் வசதிக்கு சேவை செய்கிறார்கள் தமிழ் வீர மறத்தமிழ்த் தலைவர்கள்.

இந்த ஒரு சிலரின் முடிவுகள் பல விளைவுகள் அறுவடை செய்கிறது. தலைவர்களின் சொந்த முடிவுகள் பல பின்விளைவுகளைக் கூட்டி வருகின்றது. கல்வி மாணவர்களைச் சிரச்சேதம் செய்கிறது. பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படுகிறது. தன் நாட்டையே சுடுகாடாக மாற்றி விடுகின்றது. முடிவுகள் தம் நலனுக்கும் குறும் சுயநலத்துக்கும் ஏற்ப அமைப்பதால், அவைகள் பொது அபிப்பிராயத்தில் ஒப்புக்கு விட்டு நிலைநாட்டுவதில்தான் தலைவன் அக்கறையாக இருக்கிறானே யொழிய மாற்றம் செய்ய விரும்புவதில்லை.

மாற்றுக்கருத்துக் கூறும் சிந்தனையாளர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் அல்லது சவக்குழிக்குள் தூங்க வைக்கப்படுகிறார்கள். இதுதான் தலைவர்களின் முடிவுகள், சித்தாந்தம் இன்று ஈ.ழத்தில் இதை கண்கூடு.

தலைவர்கள் அறிஞர் பெருமக்களோடு கலந்தாலோசித்து எடுக்கும் முடிவுகள், மனித வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மகத்தான மாற்றங்கள் செய்திருக்கிறது. நமது பழைய முடியரசர்கள் கவிஞர்களையும் சித்தர்களையும், ஞானிகளையும் அறிவுத்தலைமையில் அமர்த்தி ஆலோசனை பெற்று கோலோச்சினார்கள்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இதனால் நாடும் மக்களும் அழிப்பரிய முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருந்தது. இன்று காலம் மாறிவிட்டது ஜனநாயகம் என்ற போர்வையில் 'தலைவன்' எடுத்தது 'முடிவு' என்னும் அதை செயல் முறை பேச்சுக்கு இடமில்லை. இதுதான் இன்றைய 'நவீன ஜனநாயகம்'.

சாவத்துக்கு முந்திய கருத்துக்கள் எடுத்தபின்னர் நிரூக்க தந்தை நாயகன் சோக்கிரட்டீஸ் ஜனநாயகத்தின் முடிவு விஷக் கோப்பை அவனுக்கு பரிசாக கிடைத்தது.

ஆட்சியாளரும் வகுப்பினை மக்களுக்காக குரல் கொடுத்தான் முதல் தொட்டினன் 'மண்டேலா' அந்த வீர மறவனுக்கு ஆட்சியாளரின் முடிவு ஆயுள் முழுவதும் சிறைக்கூட கம்பிகள் என்று எண்ணிருந்தது.

உணர்ச்சி என்னும் மடல்கள் மழுங்குவதேயில்லை அது மக்களின் மனங்களில் நிலவும் கூர்மை பெறுகிறது கூர்மை பெற்ற குறுகிய நரம்புகளெல்லாம், புடைத்தெழ வைக்கிறது அப்போது வானத்தில் விடிவெள்ளி உதித்து விடியலுக்கு பறை கொட்டுகிறது இயற்கை தொழுகின்றது. இன்பம் காத்து கனியாகி விருவது சுலபமாகி விடும்.


நிலப்பிரபுத்துவம் ஏற்று முதலாளித்துவம் முளைத்தது. முதலாளித்துவம் புதை குழியை நாடிய நாற்கள் 'சமவுடமை உலகம்' பூத்து காய்த்து கனியாக குலுங்குகிறது ஆக மனிதர்களின் அக வாழ்வும் சில தனி மனிதர்களின் முடிவுகள் தாங்கி நிற்கும் வரலாறாக காட்சி தருகிறது.

இவை எல்லாம் தனிமனிதர்கள் தம் அறிவால் அனுபவங்களால் அமர்ந்து உறுதியோடு எடுக்கும் முடிவுகளே வெற்றியின் விளைவுகள்!

இந்த முடிவுகளே வரலாறாக சரித்திர நதியாக தொடர்ந்து ஒரே திசையை நோக்கி ஓடுகிறது.







# தலைவனுக்கோர்

## (4) — தன்மானம் —

உலகத்தில் எந்த மூலையில் வாழும் மானிட ஜாதியானாலும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதே இயற்கை. இந்த இயற்கையின் இயற்கையில் மானிடன் குழுவாக சமூக அமைப்பை ஏற்படுத்தி வாழத் தொடங்கியதும் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற முறையில் வாழ்வைத் தொடர ஆணும் பெண்ணும் கூடியதும் 'தலைமை' என்ற பீடம் ஆரம்பமாகிவிட்டது.

குடும்ப அமைப்பு முறையில் ஆண் உடல்-மனம் போன்றவற்றில் பலம் பொருந்தியதால் தலைவன் ஆகிறான். பெண் இயற்கையில் ஆணுக்கு சரி நிகரென கூறமுடியாது ஆணின் நடைமுறை வாழ்க்கைச் சூழ்நிலையில் பெண் ஆணுக்கு சமமானவள் என்பதில் ஐயமில்லை!

குழுவாக இயங்கும் சமூக அமைப்பிற்கு கூட்டத்திலிருக்கும் திறமையுள்ள- சக்தியுள்ளவன் தலைமைப்பீடம் என்ற அதிகார அமைப்பிற்கு தலைவனாகிறான். அதுநாள் வரையும் தனிமனிதனாயிருந்த இவன் தற்போது பொது மனிதனாக வளர்ச்சியடைந்துள்ளான். இவ்வாறு ஆக்கப்பட்டுள்ளான் 'தலைவன்' என்ற கிரீடத்துக்கு இவன் எல்லையில்லா முயற்சி செய்தால் அவ்வழியில் இவன் வளர்ச்சி பெறுவான் என்பதில் சந்தேகமேயில்லை.

பாகிஸ்தானில் பூட்டோவின் அரசு அதிகாரமாக செயல்பட்ட சிறையை நீக்கிட சிப்பாய்களுக்கு இரா ணுவ தலைமை கொடுத்தார் பூட்டோ ஆனால் நடந்தது என்ன இராணுவ தலைமை ஏற்ற தளபதி ஜனநாயகத்துக்குத் தூக்குக்கயிறு மாட்டிவிட்டு நாட்டிற்கே தலைவனானான்

நாடு அவன் (தலைவன்) அடைந்த வழியின் மக்களை செயல்படுத்துவது. தனி மனித சுதந்திரம் பறிக்கப்பட்டு நாட்டு மக்கள் மரண மத்தியில் துயில வைத்தான் தலைவன்

 www.tamilarangam.net 

அதிகார அமைப்பிற்கு தலைமை
தாங்கும் தனி நபர் காலப் போக்கில் தன் தவறான முடிவுகளை
யெல்லாம் (சிலருக்காக) செயற்படுத்துவதற்கு தயங்குவதில்லை
இதையும் ஈழ அரசியலில் கண்கூடாக பார்க்கமுடியும்.

தவறோ சரியோ தனிக்க
வென்டிய முடிவுகள் தன் மானப்பிரச்சனையாக என்றுணர்கிறான்
தலைவன் செயற்படுத்திய முடிவு நாட்டுக்கும் மக்களுக்கும் உகந்த
தில்லை என்றால் அதற்குரிய பலன் பெற அவன் விரும்புவதில்லை
இந்த மனநிலைக்கு மாபெரும் திறமைமிக்க ஒருசில சிலர்களான
தலைவர்களும் அடங்குவார்கள்.

எதிராளி தன்னை குறைத்து
மதிப்பிடக்கூடாது என்ற வரட்டுக் கொள்கை இவனை இழையோ
டும். முடிவுகள் மக்களுக்கில்லாது, மக்கள் முடிவுகளுக்காக தலை
யாட்டி பொம்மையாக இருக்க வேண்டுமென தலைவர்கள்
என்றுணருகிறார்கள்.

சிங்கள இனவாத - மத
ஏகாதிபத்திய அரசால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்
தமிழர் தன்மானம் தவிடு பொடியாக்கப்பட்டது. தமிழர் தனிமனித
சுதந்திரம் பறிக்கப்பட்டது. மொத்தமாக தமிழர்கள் நடுக்கடலில்
தத்தளித்தார்கள். ஆதிக்க வெறியர்கள் ஆர்ப்பரித்தாடினார்கள்.
அழிவுகளுக்கு அர்த்தங்கள் கூறினார்கள். அடக்கப்பட்டவர்கள் அடக்கிய
ஆதிக்கத்தை உடைக்க வீறுடன் விழித்தெழுந்தார்கள். முடிவு
இன்று விளைவுகள் பல எழுந்தன! நிகழ்ந்தன!

இறுதி இலங்கை இனவாத
அரசோடு இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டது; தமிழ் மக்களின்
உரிமைகளைப் பெற்றுத்தருவதாக என்ற பெயரில், அது இவர்கள்
கொள்கை அல்லது முடிவு, சம்பந்தப்பட்ட - கொல்லப்பட்ட - ஒடுக்
கப்பட்ட மக்களின், அவர்கள் உணர்வுகளை மதிக்காது இரு நாடுக
ளும் தம் நலனுக்கேற்ப ஒப்பந்தம் கைச்சாத்திட்டார்கள்.

.. முடிவுகள் தமிழருக்கு பாதகமாக
போய்விட்டது. தமிழர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள் அல்லது போரா
டுகிறார்கள் ஆனால் தலைவர்கள் தன்மானப்பிரச்சனையை நோக்குகிறார்கள்.
தங்கள் தவறான முடிவு தோல்வி பெறக் கூடாது என்பது தலைவர்களின்
மனோபாவம். இதுவே தன் மானப்பிரச்சனையாக மாறி அழிவையிட்டுச்
செல்கிறது.

தலைக்கு மிஞ்சி தவறான முடிவுகளை
செப்பனிட அல்லது அடியோடு மாற்றி அமைக்க வாய்ப்பு பெறக்கூடிய,
மன இயல்பானவனே மக்களின் நலனில் அக்கறையுள்ள தலைவன்.
இவ்வியல்பற்ற தலைவன் மனித ஜாதிக்கே விரோதமான விஷக்கொல்
லியாவான்.

சூழ்நிலையைப் பயன்படுத்தி தம்
திறமைகளையும் வகைப்படுத்தி, செயல்களையும் வகைப்படுத்தி மக்கள்,
தலைவனும். தனி மனிதன் தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்
றவகை போட ஆட்சிப்பீடம் ஏற நினைக்கிறார்களா? மாறாக மக்கள்
உரிமைகளுக்கு நலனுக்கு மாசு கற்பிக்காது தொண்டாற்றப் புறப்
படுகிறார்களா? எனைத்தான் ஈழத்தின் ஆட்சிப்பீடம் ஏற நினைக்கும்
ஆயுதத் தலைமைகளிடம் கேட்கிறேன்.

நடை முறையில் ஆட்சியாளர்
களின் அதிகாரங்களின் வரம்பு மீறல்களையும் ஆணவத்தையும் பார்க்கு
மிடத்து, இவர்கள் தம் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு
போடவே தலைமை ஏற்க ஆசைப்படுகிறார்கள். தலைமையில் தர்மைத் தவ
வறை ஏற்கும் தனிமனிதனுக்கு தன் மானம் வேண்டும். அது மக்கள்
நலனிலிருந்து மாறுபடமாட்டோம் என்ற கொள்கையில் பற்றுக - அழுத்
தமான பிடிப்புடன் கடமையாற்றும் கோட்பாட்டில்.

தலைவன் என்ற மயக்கம்
இருந்தால் நேரிய நடையில் - சீரிய செயல் வடிவத்தில் - சிந்தித்து
செயலாற்றும் திறமையில் - ஆலோசனை பெறுவதில் போன்ற கோட்பாட்டு
அடிப்படை அமைப்பிலேயே இருக்கிறது. இந்த மயக்கம் அறிவு
பிறழாது நடைபெறுமாயின் அதுவே சொந்தமான தலைமை! இது
தவறினால் செருக்கு நிறைந்த தெம்பற்ற ஆட்சித்தலைமையாகிவிடும்.
[illegible]யும் ஈழத்திலும் இந்த தலைமைதான் இயங்குகிறதா?...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்று கேள்வி நம்மில் பலருக்குண்டு. மக்களின் உணர்ச்சிகள் அவர்களின் எண்ணங்கள் பிரதிபலிக்காத தலைமைப்பீடம் நாட்டிற்குத் தேவையற்றது. இவ்வகையான தலைமைகள் கோடரிக்காம்பாக மக்களைக் கொன்று குவித்துவிடும். இதோடு இவர்களுக்குக் கும்பிடு போடும் சட்டமும் இருந்துவிட்டால் கேட்க வேண்டியதில்லை!

ஈழத்து அரசியலை வாசித்துப் பார்க்கிறேன். முன்பிருந்த சமாதான அரசியல் தலைமைகளாகட்டும் இப்போது தலைமை தாங்கும் ஆயுத தலைமைகளாகட்டும், இவர்களின் செயல் - பேச்சு - நடத்தையைப் பார்க்கும் போதும் இவர்களது சமாதானமும் பொறுமையும் வஞ்சகமும் நிறைந்த நடவடிக்கைகள் கண்டு பார்க்கும் போதும் நமக்கு காறி உமிழ வேண்டும் போலல்லவா இருக்கிறது? நாணயமாய் எவனாவது நடக்கிறான?

அவர்கள் தங்கள் சீரழிக்கவில்லை. நம்மைத்தான் சீரழிக்கிறார்கள். நமது "விடுதலை" இலட்சியத்தை கேவலப்படுத்தி விட்டார்கள். நமது அர்ப்பணிப்பை நியாய உள்ளத்தை மாசுபடுத்திவிட்டார்கள். தமிழர்கள் உயிர் கொல்லுவதில் பயமற்றவர்கள், காட்டு மிராண்டிகள் என்று உலக ஜனங்கள் கூறுகின்றனர்.

தவறு யார் மீது என்று நினைக்கிறீர்கள்?
தலைவர்கள் மீது தவறல்ல! தளபதிகள் மீது தப்பில்லை!
தவறு உ நம்முடையதுதான்!
ஆம் மக்களுடையது!

மக்கள் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் தலைமைகள் கெட்டவையா? அல்லது அடிமையாய்த் துப்பாக்கிக்குப் பயந்து வாயில்லாப் பூச்சிகளாக கிடக்கும் மக்கள் குற்றவாளிகளா? என்று கேட்போமானால், தங்கள் உரிமைக்காக சுதந்திரத்துக்காக மனிதாபிமானத்துக்காக போராடாத "மக்கள்தான்" குற்றவாளிகள்!

நல்லவர்கள் தலைமை ஏற்கத் தயங்கும் போது, உண்மைக்காக நியாயத்துக்காக போராட முன் வராத போது "அராஜகர்கள்" கை மேலோங்கிவிடுகிறது.



இது நாட்டையே அவர்களுக்கு பட்டயம் எழுதிக் கொடுப்பது போல் இருக்கிறது. இதை நடக்க இனி நாம் விடக்கூடாது.

படித்த மக்களே!
பண்புள்ள தமிழ் மக்களே!
புறப்படுங்கள் நியாயத்தைத் தேடி!

கும்பிடு போடும் சட்டத்தால் ஈழம் குட்டிச் சுவராகிவிட்டது. மற்றவன் எம்மை அடிமைப்படுத்துகிறான். இந்த கும்பிடு போடும் சட்டத்தால் நிகழும் விளைவுகள் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

## (5) தலைவனும் — அவன் கூடாரமும் —

தலைமை இது அரசியல் தலைமையானாலும் சரி அல்லது கம்பனி, தொழில் நிறுவனம் மற்றைய தலைமையானாலும் இவற்றை நிர்வகிக்கும் தலைவன், தன் கருத்துக்களுக்கு - கொள்கைகளுக்கு, எண்ணங்களுக்கு - செயல்களுக்கு நியாயம் கற்பிக்க [illegible] பக்கத்துணையாக ஒரு ஆமாம் சாமி அதிகாரிகள், அமைச்சர்கள் - ஊழியர்கள் கூட்டத்தை தன் பக்க பலமாக வைத்திருக்கிறான்.

தலைவன் எடுக்கும் முடிவுகளுக்கும், அவன் எண்ணங்களுக்கும் அப்படியே பச்சைக் கொடியைக் காட்டும் ஆமாம்சாமிக்கூட்டம் மக்களுக்கு மட்டும் துரோகமிழைத்தவர்களில்லை. கூட தலைவனின் தலைமைப் பதவிக்கே கேடு விளைவிக்கிறார்கள். இந்த [illegible] கூட்டம்.

நாட்டைக் கட்டியாளும் தலைவன் எடுக்கும் முடிவுகள் நன்மை பயக்குமோ அல்லது தீமை பயக்குமோ, அதற்கு எதிர்ப்பு இல்லாததால் தலைவன் தன்முனைப்பு கொள்கிறான். இதனால் தன்னையறியாமல் தன் முடிவுகளுக்கு நிகரு எதிர்ப்புத் தெரிய..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விக்கும் எதிர் கட்சிகளாகட்டும், அல்ல பத்திரிகைகளாகட்டும் பொது மக்கள் அபிப்பிராயமாகட்டும் அவற்றை தலைவன் அலட்சியப் படுத்துகிறான். அல்லது அவற்றுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கிறான்!

இவை ஏன் நிகழ்கிறது?

தலைவன் தன் செயல்களில் திறமையில் அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ளான். நான் எடுக்கும் முடிவுகள் சரியான திட்ட வரைமுறையுடையது என்று பல முறை ஆமாம் சாமி கூட்டத்தால் பாராட்டப்பட்டதும் அவன் அந்த நம்பிக்கைக்கு "எண்ணங்கள்" அழுத்தம் செய்கின்றன. எண்ணங்கள் உரமேறும் போது அவை முடிவுகளாக பரிணமிக்கிறது. இந்த முடிவுகள் தவறானவையாக இருக்குமாயின் இதன் பலனை நாட்டு மக்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது.

மக்கள், ஆட்சித் தலைவனின் தவறான முடிவுகளால் படும் துன்பங்களை வாய்மூடி மௌனியாகச் சகித்துப் பார்த்துக்கொள்வின் அது தலைவனின் சர்வாதிகார நிலைக்கு உட்படச் செய்கிறது.

நாட்டின் சிந்தனைவாதிகள் படித்தவர்கள், பத்திரிகைகள் இவற்றுக் கெதிராக 'போர்முரசு' கொட்டும் போது, மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்படுகிறது. மக்கள், உரிமைக்கு 'குரல்கொடுத்து' போராட ஆரம்பிக்கும் போதுதான் தலைவன் தன் பதவிக்கு ஆபத்து நெருங்குவதையும் தன் முடிவுகளின் தவறுகளையும் உணரத் தொடங்குகிறான். பதவியைத் தக்க வைப்பதற்கு அவன் பலப்பரீட்சையில் இறங்கி நாட்டில் பல குளறுபடிகளையும் அடக்கு முறையையும் ஏற்படுத்தி நிர்வாகத்தை சீர்குலைக்கிறான்.

இவற்றுக் கெல்லாம் 'மூலகாரணம்' ஆமாம் சாமிக்கூட்டம்தான். இந்தக் கூட்டம் நாணற் புல் போன்றது. காற்றடிக்கும் போது காற்றின் பக்கமும், வெள்ளம் ஓடும் போது வெள்ளத்தின் பக்கமும் சாய்ந்துவிடும் நாணல் போன்றவர்கள்.

இன்று ஈழத்தில் நடக்கும் புதுமைகளுக்கும், அராஜகங்களுக்கும், சிந்தனைவாதிகளின் புத்திசாலிமை



சோதனைக்குள்ளாவதற்கும், போட்டி வாத 'போராட்டத்துக்கும் காரணம் என்ன? என்று நான் சிந்திக்கும் போது இந்த ஆமாம் சாமி கூட்டம்தான் காரணமாகப் படுகிறது.

ஆயுதம் ஏந்திய தலைவர்கள் எடுக்கும் முடிவுகளுக்கும், அவர்கள் அறிவுறுத்தல்களுக்கும் எண்ணங்களுக் கும் கட்டளைகளுக்கும் ஆமாமாம் சாமி, தளபதிகளும் சிப்பாய்களும் தலையாட்டுவதால்,- தாக்கி அழிப்பதால், தலைவன் தன் சுய கௌரவத்திற்கு தீங்கிழைக்கும் சகல காரணிகளையும் களைய முற்படுகிறான். தமது எண்ணத்திற்கு மாறான செயல்கள் – கருத்துக்கள் – முடிவுகள் செயற்படுத்தும் 'மீண்டுமவரை தலைகுனிய வைக்க முயற்சிக்கிறான். அல்லது அழித்துக் கட்டப் பார்க் கிறான்.

இவ்வித தன்முனைப்பு முயற்சியினால்தான் ஈழத்தில் இன்று பல போராளி தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டதும், தம் கருத்துக்களுக்கு – செயல்களுக்கு – மாற்றுக் கருத்துக் கூறும் அறிவு ஜீவிகள் 'மேல்' சோதனைக்குள்ளாக்கப் பட்டதும், அறிவு ஜீவிகள் திடீர் திடீர் என்று காணமற் போவதும் கடத்திக் கொலைகள் செய்து விட்டு துரோக விரோதி என்று பிதற்றுவதும் ஆயுதத்தைக் காட்டி அறிவு ஜீவிகள் செயற்படாமல் முடக்கி விடுவதும் இந்த தன்முனைப்பு ஆணவம் தான்.

தலைமையில் உள்ளவனுக்கு அவன் செயல்களுக்கு – முடிவுகளுக்கு எதிர்ப்பு இன்றி சாதகமாக செயற்படும் கூட்டங்களால் ஏற்படும் விளைவுகள் ஒரு நாட்டின் எண்ண ஓட்டத்தையே மாற்றி விடக்கூடிய சக்தியுண்டு!

நாட்டில் நிலவும் எண்ணங்கள் எப்படியோ அப்படியே ஆக்கங்களும் நிகழ்கின்றன. ஈழத்தின் எண்ண ஓட்டங்கள் சுவாரிசங்கள்! தெளிவில்லாத சித்தாந்தங்களின் கவர்ச்சி; குப்பைத் தொட்டிக்குள் வீசி எறியப்பட்டுக் கொண்டிருக்கும் தத்துவங் களின் மாலையால் கட்டுண்டு போய் இருக்கும் ஒரு சிறு கூட்டம், பல ரீகளின் வெற்றுப் பேச்சுக்களால் – எண்ணங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ண ஓட்டம்; ஆயுதமே பலம் கொண்ட தலைமையாகப் படுகிறது.

அதற்கெடுத்தாலும் ஆயுதம் முன்னிற்பதும், சிந்திக்கும் மனோபாவம் பின்னிற்பதுமாக வழி கோலப்பட்டுள்ளது. ஒரு சமுதாயத்தின் அபிலாசைப் பூர்த்திக்கு – விடுதலைக்கு வித்திடுவது சிந்தனைத் தெளிவுமே! தெளிவான எண்ணங்கள் மேவிய செயல்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யார் இந்த சிந்தனைத் தலைவர்கள்?

படித்தவர்கள். பள்ளி-கல்லூரி ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், இயற்கை விஞ்ஞானிகள், சமூக விஞ்ஞானிகள். எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், சமூக சேவையாளர்கள், மத போதகர்கள் இவர்கள் யாவரும் எண்ண ஆக்க தாரர்கள்

தமிழினத்தின் எண்ணங்களை உருவாக்கும் இந்த தலைவர்கள், இன்று நாட்டின் மோசமான நிலைமைகளைக் கண்டும் காணாதது போல் சுயநல பெருக்குடன் வாழ்வது தமிழ் சமுதாயத்தின் துரதிஷ்டம். 'இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன!' என்று இவர்கள் தம் வருமானத்துக்காகவும் பெருமைக்காகவும் தடம் புரண்டு வாழ்கிறார்கள்.

பத்திரிகைத் துறைக்கு எண்ணங்கள் உருவாக்கும் பொறுப்பு கணிசமான அளவு உண்டு! இந்த அரிய சாதனம் ஆட்சித்தலைமையின் கையில் சிக்குண்டு அல்லது பணக்காரர்களின் பணத்துக்கு அடிமையாகி அவர்களின் நலனில் அக்கறையாக, செயல்புரிகிறது.

ஒரு மனித சமுதாயத்தின் தன்மையை நிர்ணயிக்கும் 'தலைமையின் கருத்துக்கள் - முடிவுகள் - செயற்பாடுகள்' அப்படியே கண்ணை மூடிக் கொண்டு ஆமோதிக்கின்றது. அரசைச் சார்ந்து நிற்கும் பத்திரிகை. எதிர்க்கட்சியை சார்ந்து நிற்கும் பத்திரிகையோ ஆளும் கட்சிக்காரன் எடுக்கும் நல்ல முடிவாகட்டும் இல்லை தீய முடிவாகட்டும்... மொத்தமாக அவற்றைத் தாழ்மைப்படுத்தியே எழுதிக் குவிக்கின்றது.

ஈழத்தில் நடக்கும் கேவலமான பிரச்சனைகளையெல்லாம், மூடி மறைக்க எண்ணும் சில பத்திரிகைகள் செயற்படுகின்றன. நல்லது கெட்டது யாவற்றையும் எதிர்ப்பதே கொள்கையாக சார்பு பத்திரிகைகள் செயல்படுகின்றன.

நடுநிலைப் பத்திரிகை எனக் கூறிக் கொண்டு எதையும் சரியென ஆமாம் சாமி தலையாட்டி பத்திரிகைகள் பல மக்கள் மத்தியில் தவறான எண்ணங்களை உருவாக்கி வருகின்றது.



எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் 'கலை மனித வாழ்க்கையின் கண்ணாடி' என்று கூறிக் கொண்டு, வாழ்வில் நிகழும் நடைமுறை வாழ்வியல் கருத்துக்களை மையப்படுத்தி எழுதுகிறார்கள். 'கலை' இதற்கு மாறாக செயற்படுகிறது. மனித வாழ்க்கையின் மறுபக்கங்களைப்பற்றி தெரிந்து கொள்ளாமலேயே "கலை" ஒரு மாறும் பிம்பத்தைக் காட்டுவதாகவே செயற்படுகிறது.

சிந்தனைத் தலைவர்களாகிய கவிஞர்கள், எழுத்தாளர்கள் கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள், பத்திரிகைக் காரர்கள் நாட்டையும் வீட்டையும் தீய எண்ணங்களால் நிரப்பி சாக்கடையாக்குகிறார்கள். இவர்களின் இந்த செயல்களால், நாட்டில் நிலவும் எண்ணங்கள் பொதுவாக சுயநலக் கண்ணோட்டத்துடனேயே செயல்படுகிறது. தனி மனிதன் அதிகாரங்களை சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொள்கிறான். தன் குடும்பத்திற்கு தனக்கு ஆபத்தில்லாமல் வாழ்ந்தால் போதுமென்ற எண்ணத்தால், அவன் அதிகாரத்துக்கு அடிமையாகிறான்.

'என்ன கர்த்தாக்களோ அராஜகங்கள், அக்கிரமங்கள், படுகொலைகள், கொள்ளைகள், பாலியல் பலாத்காரங்கள் கண்டும் காணாதது போல் விட்டு விடுகிறார்கள். ஈழத்தில் நிலவும் தலைமைகளின் ஆளவைப் போக்கை, துப்பாக்கி மிரட்டல்களைக் கண்டு அவற்றுக்கெதிராக எழுதவோ பேசவோ திராணியற்று முதுகெலும்பில்லாமல் வாழும் நிலைமை அவர்களிடம் காட்சி நல்கிறது சிந்தனைத் தலைமைகள்.

ஈழத்தின் துப்பாக்கித் தலைமைகள் தாங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு - எண்ணங்களுக்கு - செயல்களுக்கு ஆதரவாக சில சிந்தனைத் தலைவர்களையும், மக்கள் கூட்டத்தையும் பெற்றிருப்பதால் அவர்கள் செய்யும் முடிவுகள் செயல்கள் யாவும் நியாயமானதாக தங்கள் "ஊதுகுழல்கள்" மூலம் பிரகடனப்படுத்துகிறார்கள்.

எதிர்ப்பதற்கு திராணியற்று முடங்கிப்போய்க் கிடக்கும் எண்ண ஆக்கதாரர்களின் செயல்களாலும், மக்கள் கூட்டத்தாலும் 'துப்பாக்கித் தலைமைகள்' சர்வாதிகாரிகளாகிவிட்டார்கள். இவர்கள் கொலைகாரர்களாகவும் வழிப்பறி கொள்ளைக் காரர்களாகவும் அராஜகம் புரியும் ஆட்டு மந்தைகளாகவும் செயல்பட வைத்தவர்கள் இந்த சிந்தனைத்தலைவர்கள் தான் என்றால் மறுப்பது யார்?

இங்கிலாந்து நாட்டின் படித்தவர்கள், பேராசிரியர்கள் - பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் . . .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களுக்கள் 'பெர்னாட்ஷா', போன்ற அறிஞர்கள் கூட அரசின் நல்லது கெட்டதை, ஆராய்ந்து ஆதரித்தும் எதிர்த்தும் எழுதியும் பேசியும் வந்தார்கள். அவர்கள் அமைத்த பேபியன் சங்கம் [Fabian Society] இங்கிலாந்தில் மாபெரும் ஜனநாயக தொழிலாளர் சமுதாயம் மலர வழி-வகை செய்தது. சிந்தனையாளர்களை சரித்திரத்தைப் புரட்டிப்பாருங்கள்.

ஈழத்தில் இப்படியொரு குழு கிடையாததால் (ஏனைய இயக்கத்தார்கள் 'உயிர்துறக்க பயந்தவர்') தன் முனைப்புக் கொண்ட ஆயுதத்தலைமைகள் அராஜகவாதிகளாகவும் - சர்வாதிகாரிகளாகவும் பரிணமம் பெற்றார்கள். தட்டிக் கேட்க ஆளில்லாததால் இவர்களின் 'தன் முனைப்பு' அளவுமீறி அழிவுவேட்டைச் செய்கிறது. உதவு கிறது.

ஈழத்தமிழர் உரிமையை வென்றெடுக்கும் 'போராட்டம்' சரியான பாதையில் செல்லவும். பொது மக்கள் அபிப்பிராயங்கள் பயமின்றிக் கூறவும் ஒரு நல்ல தலைமை உருவாக வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் சிலவற்றைச் சாதிக்காமல் அவர்தம் கருத்துக்கள் மதிக்காது ஒரு குறைந்த திட்டங்கள் இன்றி தம் பதவிகள்-அதிகாரங்கள் நிலை நாட்ட தலைமை நிறுவ நிறுவ பல ஆயுதக் குழுக்கள் போட்டி போடுகிறார்கள். பதவி அதிகாரத்துக்காக, கேவலம் தமிழர் உரிமைகள் காற்றில் பறக்க விடும் தலைமைகள் எதற்கு சொல்ல. தனிமனித சுதந்திரத்தை பறிக்கும் தலைமைகள் தேவைதானா என்று ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே கேட்டுப்பார்க்க வேண்டும்!

மனித நேய-மனித சுதந்திரத்துக்கும், சுயநிர்ணய உரிமைக்கும், சமூக பொருளாதார மாற்ற விருத்திக்கும் உழைப்பதாக கூறி மக்களின் தீர்வாக தலைமைகள் ஏற்றவர்கள் தமிழர்களைக் கடத்தியும், பயமுறுத்தியும், கொலைசெய்தும் தம் சந்ததிகளுக்கு சொத்து சேர்க்கத்தான் 'தனிநாடு' கோஷம் போட்டார்களா?

இல்லம் பெறும் தமிழர்களுக்காக இன்னுயிர் கொடுத்தோர் எத்தனை பேர். அவர்கள் மேலும் புழுங்கு கின்றார்கள்.



மேற்குலக நாடுகளில், இருந்துக்கு பணம் சேர்த்த ஆயுதக் குழுக்களின் 'தோழர்கள்', லட்சக்கணக்கான ரூபாய்களை கையாடி விட்டு இங்கு உல்லாசமாக 'கடையிலும்' 'ஹொட்டலிலும்' வாழ்வது தெரியாதா என்ன? நாம் உழைத்த பணங்கள் அவர்கள் வீட்டு குடும்ப சொத்தாகி விட்டது. L.T.T.E யின் பணத்தையும் P.L.O.T யின் பணத்தையும் STUTTGART வாழ் பிரமுகர் 'கையாடல்' செய்தது எத்தனை பேருக்கு தெரியும்?

இப்படி எத்தனை பேர் கொள்ளையடித்தார்கள்!
இவற்றை எல்லாம் தட்டிக் கேட்க
பத்திரிகைகளுக்கு. தைரியமில்லை!

மேற்குலக நாடுகளில் வதியும் ஈழத்தமிழர்கள் இவற்றையும் உதாசீனப்படுத்துவது அழிவுவேட்டைச் செய்யும்! இங்கு வாழும் சிந்தனைத் தலைமைகள் உயிரை துச்சமாக மதித்து அவலங்களை பரப்ப வேண்டும். இங்கு வெளிவரும் சஞ்சிகைகள் தலைவர்களின்-தோழர்களின் அராஜக செயல்களை தோலுரித்துக் காட்ட வேண்டும். இப்படிச் செய்வார்களாயின் தலைமைகள் தங்களின் அராஜக போக்குகளை மாற்றி தவறுகளை திருத்தி தம்மை ஒரு நல்ல கட்சித்தலைமையாக நடாத்துவார்கள் இதில் சந்தேகமே இல்லை!

தலைவர்கள் தங்கள் கருத்துக்களுக்கு வரும் மாறுபட்ட கருத்துக்களை பொறுமையுடன் ஆராய்ந்து சரி பிழைகளை தாமே பொறுப்பேற்று ஈழமக்களின் சக்தியை விரயமாக்காமல் ஒருங்கிணைந்து தம்மை பலப்படுத்த வேண்டும்.

இதை இவர்கள் செய்து முடிப்பார்களாயின் மக்களும் தலைவன் அன்பவன் யார் என்பதைப் புரிந்து கொண்டு ஊக்கம் தருவார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அச்சம்!



தமிழா உன்
கனவுகளைக்
கடதாசியில் எழுதியதை
காதுகளுக்கு
சொல்லி வைக்காதே!

எவரும்
காட்டியவரிடம்
அடகுவை உன் பேனாவை
ஆனால்
உனக்குத் தெரியாது
பேனா அதிக சக்தியென்று!

புரட்சி தேரும்
பதுங்கிய நீ
அச்சமில்லை!
அச்சமில்லையென்று
பாடுகிறாய்
நீ இருட்டில் போகும் போது
மட்டும்!

எங்கே
விலை போனது
உன் வீரம்?
சோற்றுக்கா
உன் உடம்பு?
சோம்பலுக்கா
நீ விருந்து?

வெளியே வா!
பாரதியும் காந்தியும்
சுவாசித்த காற்று
உன்னோடு
கதைக்கவும்
கைகுலுக்கவும்
ஆசையாயிருக்கிறது!

—oo—

— [illegible]

# அபிப்பிராயமும் ⑦ — தலைவனும்

எந்த முடிவு எடுத்தாலும் என்று தலைவன், அருமைப்படுத்தப்படாமல் தன் எண்ணத்தின் முடிவை பொதுஜன அபிப்பிராயத்துக்கு விடச் சொல்லவில்லை. அது சாத்தியமில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்கள் தலைவரை அண்ணி இருந்து திரட்டாமல் அபிப்பிராயங்களில் கூறப்படும் நல்ல யோசனைகள் — அறிவுரைகள் — மாற்று நடவடிக்கைகள் என்று முறை பரிசீலனை செய்வதே தலைவரின் அறிவுடைமையாகும்.

ஜனநாயகத்தின் குறைபாடுகளில் ஒன்று தலைவை அண்ணி தவறுகளையும் சரியானது என்று பிரகடனப்படுத்துவது!

காலத்துக்கு முந்திய ஒன்றை விளக்குகிறேன் அத்தாவுடைய சேந்தனின் 'சகோதர முடிவு' தந்தைகள் அண்ணி, ஏனையோர்க்கு தூக்குக் கயிறு மாலையாகப் போடப்பட்டது. அவர் கூறிய பல உண்மைகள் இன்று உலகத்துக்கு வெளிச்சமாகிவிட்டது. உண்மைக்குப் புறம்பாக உரைக்கப்பட்ட மதக் கருத்துக்கள் இன்று உருத்திராவால் மாற்றப்படுகின்றன.

சட்டம் போட்டு ஒப்பாரி விட்ட தமிழருக்கு மத்தியில் வீறு கொண்டெழுந்த இளம் தலைமைகள் தமிழரசு 'கைப்பற்றலில்', தேசிய அந்தஸ்து பெற்றுத் தந்தார்கள் நான் மறுக்கவில்லை.

அதிகார கைமாற்றம் தேவையா? அப்படி நமக்கு விருதுத் தேவையா? எழுதுகோலுக்கு மத்தியிலும்.. அதிகார கைமாற்றம்தான் நடக்கப் போகிறது. அனைவரும் ஆட்சிப் பீடத்தில் ஏறுவதா? இதுதான் தமிழரின் கனவா?

கூட்டணியில் அபிப்பிராயம் கேட்கும் தலைவர்கள் உண்மையை குழி தோண்டிப் புதைத்து விட்டு அபிப்பிராயத்துக்கு காப்பவரா . . .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சம்பவமே கட்டுவதை அவன் அன்றுடம் ஈழத்தில் காண்பது சகஜம். மக்களின் அபிப்பிராயங்களை காற்றில் பறக்க விட்டுவிட்டு போராடிய ஆயுதத் தலைமைகள் உலகில் இருந்தொழியாமல் போன வரலாறுகள் பலவுண்டு.

மக்களை மந்தைகளாக கருதிக்கொண்டு நிலப்பிரபுக்கள் வாழவைக்க காந்தலாம் கட்டிய தமிழ்த் தலைமைகளின் நிலையென்ன? தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் கருத்துக்கள் - உணர்வுகள் மதிக்காது சாதி வெறியை தூண்டிவிட்டு குளிர் காய்ந்த ஈழத் தலைமைகள்தான் இன்று மீண்டும் வருகிறார்கள் "புதிதாக!

வெள்ளைக்கார ஆசனம் சிங்கள தலைவர்களின் ஆட்சியில் 1949ம் ஆண்டு 10 லட்சம் தமிழர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப் பட்டார்கள். அந்த வேளையில் தமது தலைமையை தக்க வைப்பதற்காக தமிழர்களின் உணர்வுகள் - அபிப்பிராயங்களை நெரிமுடுக்காது, சிங்கள அரசு ஆட்சியாள எஜமான்களுக்கு ஒத்தாசிய தமிழ்த் தலைவர்கள் உலகம் அறியும். இவர்களின் அந்த ஈனத்தனம் இன்றும் 'ஒருவாக, இருப்பதை நாம் அனுபவிக்கிறது.

பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோரின் தலைமைகளைப் பற்றி தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். இவர்களின் தமிழீழக் கோரிக்கை எல்லாம் தம் பதவிக்காகவும் தாம் சார்ந்த வர்க்கத்திற்காகவும் எழுப் பப்பட்டது. இதுதான் உண்மை!

இன்றைய நாளடைவில் அழிந்து வர்க்கத்திற்கும் ஏற்பட்ட அழிவின் காரணத்தாலும் எரிய தலைமுறைத் தலைவர்களின் தலைமையாலும் திசை திரும்பித் தமிழ் மக்கள் அனைவருக்கும் வேண்டியதாக அமைந்தது.

பழைய கால படிப்பினைகளைக் கண்டும் நாம் தலைமைகள் தம் போக்கை மாற்றவில்லை என்றால் அழிவுகள்தான் பெருகும். இன்றைய அழிவுகளுக்கும் - அராஜகங்களுக்கும்.. தொண்டு தொட்டு, மக்கள் அபிப்பிராயங்களை காற்றில் பறக்க விட்டதுதான் காரணம்!

தலைமைகளின் கருத்திற்கு அபிப்பிராயத்துக்கு மாறாக செயற்படும் பத்திரிகைகளை தடை பண்ணுவதும்..



பண்ணுவதும், அரச ஊடகங்களில் பற்றுதல் செய்வதும் குண்டு வைத்து தாரியவங்களைத் தகர்ப்பதுமா விடுதலை? ஈழத்தில் இது நடைபெறுகிறது.

மக்கள் நலனாக தன்னை வளர்க்க முற்படுபவன் அராஜகவாதிகளுக்கு அப்பால் பட்டவனாக இருந்து தன் பணியைத் தொடர வேண்டும். மக்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்தும் பத்திரிகைகளின் விமர்சனங்களை ஆராய்ந்தும் தலைவன் தன் முடிவுகளை செயற்படுத்த வேண்டும்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் ஆக்கங்களுக்கும், வழிகோலுபவர்கள் அந்நாட்டின் சிந்தனையாளர்கள், தூய எண்ணங் கொண்ட தலைவர்கள். அந்த சிந்தனைத் தலைவர்கள் தம் கருத்துக்களை நூல்களாகவும், பத்திரிகை விமர்சனங்களாகவும், கட்டுரைகளாகவும், ஆலோசனைகளாகவும் தருகிறார்கள். அவர்களின் எண்ணங்களை ஆராய்ந்து பார்க்காது அவர்கள் தம் தலைமைக்கு எதிராக செயற்படுவதாக கருதி கழுமரத்தில் ஏற்றுவது நாட்டை அழிப்பதற்குச் சமம்!

இன்று ஈழத்தின் அழிவுகளுக்கும் அவலத்துக்கும் காரணம் என்னவென்பதைப் பற்றி ஆயுதத் தலைவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமக்கு ஆலோசகர்களாக சில படித்த தமிழ் மனிதர்களை அமர்த்தி வைத்துக் கொண்டு நாட்டு நடப்புக்களை அறுதியிட்டு - முடிவுகள் எடுத்தாலும் குறிப்பிட்ட சிலரின் விருப்பு வெறுப்புகளாகவே அமையும்.

நாட்டிலுள்ள படித்தவர்களின் - தூய எண்ணச் சிந்தனையாளர்களின், சமுதாய கலைஞர் அறிஞர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அமைய வேண்டும். அதுவே ஒரு நாட்டின் எண்ண ஓட்டத்தின் முடிவாக அமையும்.

"அவன் கொள்ளையடித்த பணத்தை சுருட்டிக் கொண்டு, உல்லாசமாக வாழ்கிறான் கொழும்பில்!"

"இவன் சேர்த்த காசையெல்லாம் குடும்பச் சொத்தாக்கிப் போட்டு அரசியல் கட்சியா அங்கீகரிக்கப்பட்டதும் அப்பாவிகளை அதிகாரத்தால் ஏமாற்றுகிறான்!"

"இவன் பாதி போராடியே மக்களை அழியவிடப் போறான்!"

மக்கள் நாளாந்தம் புலம்பிக் கொண்டிருப்பது காதுகளில் விழுந்த வண்ணமிருக்கிறது!

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மக்களின் நிலை புறம் வைத்தால் ஆரம்பமாகிறது. பின் அதுவே எதிர்ப்பாக - போராட்டமாகவே முடிகிறது. எல்லா மக்களிடமும் ஏதோ ஒரு அமைதியைத் தேடும் எண்ண ஓட்டம் இருப்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

தமிழர்கள் அமைதியை நாடுகிறார்கள். நேர்மையான தலைவர்கள், ஞானமுள்ளவரை, தூய அறிஞர்கள் வீரத்தலைவர்களாக ஏற்க ஆசைப்படுகிறார்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஹிட்லரின் நாசி ஜேர்மனியும் இராணுவ தந்திரத்தாலும் [BRITISH] பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை காப்பாற்றிய 'வின்ஸ்டன் சர்ச்சிலை', அந்நாட்டு மக்கள் யுத்தகாலத்தில் ஆதரவாகவே இருந்தார்கள். ஆனால் அடுத்த தேர்தலுக்கு வந்த சமயம் 'தோல்வி', மக்கள் நிராகரித்து விட்டார்கள்.

யுத்த காலத்தில் மக்களின் அபிப்பிராயத்தை செவிமடுக்காமல் போரிட்டு வெற்றியீட்டிய தலைவனை மக்கள் யுத்தம் முடிந்ததும் ஏற்கவில்லை. அமைதியான நிலையிலும் அந்த தலைவன், மக்கள் கருத்துக்கு 'காது கொடுக்காது, எல்லாம் தொடரும் என்ற காரணத்தால் மக்கள் 'சர்ச்சிலை' நிராகரித்தார்கள். இதைக்கண்டு உலகமும் வியந்தது. காரணம் மக்கள் முடிவுதான்!

இந்த நிலை ஈழத்து ஆயுத தலைமைகளுக்கு வராமல் நடந்து கொள்வது தலைவர்களின் நடவடிக்கைகளைப் பொறுத்தே அமையும்.






# தலைவன் - அவன் யார்?

8

தலைவன் சூழ்நிலையை உருவாக்குகிறானா?
அல்லது சூழ்நிலை தலைவனை உருவாக்குகிறதா?

கடினமான கேள்வி! தலைவன் சூழ்நிலையிலிருந்து வருகிறான் சூழ்நிலை கைமறைவாய் போனால் தலைவனுடன் சேர்ந்திருக்கிறது. நுண்ணறிவும் - தீர்க்க தரிசனமும் - அசாதாரண துணிவும், படைத்த தலைவன் சூழ்நிலையைத் தனக்கு சாதகமாக மாற்றி தன் எண்ணங்கள் நிறைவேற்றுகிறான்.

எதிர்க் கழகங்களின் திட்டங்களும் - செயல்களும் - ஆசைகளும் எந்த வகையிலும் நசுக்கி விட்டு, தலைவன் தலைமைப்பீடம் ஏறுகிறான். அல்ல தலைமைப் பதவியை அடைகிறான். தலைமைப்பதவி கழகத்துக்குள்ளேயோ அல்லது மாற்றுக் கட்சிக் கழகத்துக்குள்ளேயோ நடக்கும் அதிகார ஆசை, போட்டி. யாருக்கு வலிமையும் சக்தியும் அதிகம் இருக்கிறதோ அவன் மற்ற எதிரியை நசுக்கி தலைமைப் பதவியை தக்க வைத்துக் கொள்கிறான்.

ஈழத்தில் பார்த்திருப்பீர்கள் தற்கால ஆயுத தலைமைகள் சக சகோதரர்கள் தமக்குப் போட்டியாக வந்து விடுவார்கள் என்ற ஒரே நோக்கத்திற் கிணங்க எந்தக் காரணமுமின்றி ஆயுத வேட்டையின் மூலம் பல நூறு இளைஞர்கள் கொன்றழித்தார்கள். வீதியில் உயிருடன் போட்டு நெருப்பிட்டு கொளுத்தி மகிழ்ந்தார்கள். கார் சக்கரங்களின் டயர் போட்டு எரித்தார்கள் தாய் சகோதரர்களுடன் உணவருந்திக் கொண்டிருந்த போராளிகள் குடும்பத்தோடு சுட்டுப் பொசுக்கினார்கள்.

தம்மை விட மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள தலைவர்கள் - தளபதிகள் கடத்தி ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடத்தி கொன்றழித்தார்கள். இந்த ஈனத்தனங்களால் வெகுண்டெழுந்த மாற்று இயக்கங்கள். ஒருவரை ஒருவர் மோதி கொன்றழிக்கும் வேலையில் ஈழத்தில் செயல்படுகிறார்கள். இதற்குள் இவர்கள் தாம் கொண்ட புனித இலட்சியத்தை காற்றோடு பறக்க விட்டுவிட்டு போட்டிப்பதவிப் போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள். இந்த ஈனத்தனத்துக்கு முழுப் பொறுப்பும் பாலசிங்கமும் அவர் கைப்பாவை பிரபாகரனும்தான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

தலைவன் பல போராட்டங்களில் 'குழிபறிப்பு' வேலைகளில் ஈடுபட்டு அடிபட்டு அதில் நன்கு நாட்பட செல்வாக்கினால் தலைவன் ஸ்தானத்தை அடைகிறான். இவனுக்கு நன்றாகத் தெரியும் எவ்வளவு பெரிய மகத்தான "மக்கள் சக்தி" தன் கைகளில் இருக்கிறது என்று! மக்கள் தான் என்றும் எண்ணங்களாலும் - சொல்லும் உறுதி மொழிகளாலும் - நடவடிக்கைகளாலும் - செயல்களாலும் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையாலும், தான் விரும்பிய வண்ணம் திசை திருப்ப முடியும் என்ற நம்பிக்கையாலும் தலைவனாகிய இவன் செயல்படுகிறான்.

தலைமைப்பதவியில் உள்ளவன் எல்லாவற்றையும் நம்பும் ஏமாளியல்ல அதே போல் "மக்கள் எதைக் கூறினாலும் நம்பிவிடும் ஏமாளிகள்" என்ற உண்மையில் அறிந்தவர்கள். மக்களது இந்த குணத்தால் மட்டுமே தலைவன் பொது வாழ்வில் இறங்குவதில் முடிவெடுப்பதில்லை. தாம் விரும்பிய செயல் செய்ய வேண்டுமென்றால் ஓரளவு மக்களிடம் அதிகாரத்தை பிரயோகிக்க அவனுக்கு தெரியும். இந்த நோக்கில் ஈழமக்களின் வாழ்வை நோக்குங்கள்! அங்கு நடைபெறும் பொது மக்களின் படுகொலைகளுக்கு விளக்கம் காண்பீர்கள்!

நியாய பூர்வமான வாதங்களுடன் அதிகாரமும் சேரும் போது மட்டுமே மக்கள் மத்தியில் காரியங்கள் வேகமாக நடைபெறுகின்றது. என்ற உண்மை நிலையை ஈழத்து ஆயுத தலைமைகள் புரிகிறார்களில்லை!



எதற்கும் இவர்கள் துப்பாக்கி முனையில் தனி காரியம் ஆற்றப் பார்க்கிறார்கள். இது ஆயுதம் ஏந்திய இளைஞர்களின் ஞான சூனியமாகும்.

ஈழ விடுதலை இலட்சியத்தை இவர்கள் தங்கள் சொந்த இலட்சியமாக கருதவில்லை. ஈழத்தின் முன்னேற்றத்தையும் - வளர்ச்சியையும் தம் வளர்ச்சியாக சாதனைகளாக இவர்கள் எண்ணவில்லை. இதனால் பலர் கெட்ட பெயருடன் தலைகுனிவுடன் நாட்டைவிட்டு வெளியேறும் நாள் வெகு தூரத்திலில்லை!

"ஈழத்தையும், ஈழமக்களையும் குட்டிச் சுவராக்கி கொலை செய்வோம், என்று கூறி இவர்கள் தலைவர்களாக வரவில்லை. எனினும் சேவையும் தம் பதவிப்போட்டிக்காக தமிழ்மக்கள் கொண்ட இலட்சியக் கனவை இலட்சிய வேட்கையை உடைத்தெறிந்து துப்பாக்கி ஏந்திய சகலரும் "தலைவர்களாக" தம்மை பிரகடனப்படுத்தி தமிழ் சமுதாயத்தில் உலாவுகிறார்கள்.

ஈழத்தில் ஆயுதக் குழுக்களுக்கு மக்கள், கௌரவமும் அந்தஸ்தும் கொடுத்து, முக்கியத்துவம் கொடுத்து கோலும் போட்டார்கள். இதனால் மூன்றாம் தரப் பேர்வழிகளாக இருந்த ஆயுததலைவர்கள் தம் நிலையைக் கணிப்பதில் ஏற்பட்ட மனோபாவக் கோளாறே தவறான முடிவு எடுக்கவும் தவறான பாதையில் செல்லவும் காரணமாகியுள்ளது.

கௌரவமும், அந்தஸ்தும் இவர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவமும் போதையாக ஏறியது இந்த வேளையில் பல குழுக்கள் தத்தம் வழிகளில் ஈழமக்களிடம் செல்வாக்குப் பெற்றதும், குழுத்தலைமையாளும் பதவிக்கும் அந்தஸ்துக்கும் வேறுக் குழுக்களால் ஆபத்து நேருவதை அறிந்தார்கள்.

இதனால் அவர்கள் மனநிலையில் ~~பதவி~~ பதறிப்போகிறார்கள். பதவி இல்லாத நிலை, அதிகாரமில்லாத நிலை உருவாகினால் அவர்களால் எண்ணமுடியாத சகிக்கமுடியாத ஒன்றாகியது.

இந்நிலையால் தம் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள எதையும் செய்யத் துணிந்தார்கள்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இதனால் ஈழ விடுதலை இலட்சியம் காற்றில் பறக்க விடப்பட்டு ஒருவரோடு ஒருவர் மோதினார்கள். பல போராளிகள் கொன்றொழித்தார்கள். இப்போது தலைவர்கள் தம் பாதுகாப்பே உயிர்ப் போராட்டமாக வாழ்கிறார்கள். இந்நிலையால் தமது கழகத்துக்குள் உள்ள ஒரு குறிப்பிட்ட கும்பல் தவறான காரியங்களில் ஈடுபடும் போது அவர்கள் தலைவர்களால் கட்டுப்படுத்த கண்டிக்க முடியாமற் போய்விட்டது. காரணம் அக்கும்பலால் தமது பதவிக்கெதிராக சதி நடக்குமோ என்ற பயம். இதனால் கழகத்தின் கீழ் மட்டங்களில் நடக்கும் கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் போன்ற எதையும் கண்டும் காணாதது போல் ஆயுத தலைவர்கள் நடந்து கொள்வது சகஜமாகிவிட்டது.

இப்படி ஆரம்பித்த தலைமைகளின் உட்கட்சிப் போராட்டம். ஈழத்தின் அழிவில் போய் முடிந்துவிட்டது! சிறந்த அரசியல் அறிஞர்களும், ஞானிகளும் தலைமையை அலங்கரிக்க வேண்டும். ஆனால் ஈழத்தில் பல திறமையுள்ளவர்கள் இருக்கிறார்கள். அறிவுக்கு பஞ்சமில்லாத பொது நலவாதிகள் இருக்கிறார்கள். இருந்தும் விலகி நிற்கிறார்கள்

இது ஏன்?

காரணம் துப்பாக்கியும் தொங்கும் தோட்டாக்களும்தான்

ஈழத்து ஆயுதத்தலைவர்களின் உள்ளத்தில் முதலில் இலட்சிய வெறியே உருவாகியது. பின்பு காலப்போக்கில் பதவி வெறியாக மாறியது. ஆயுதத் தலைமையில் இருப்பதே இலட்சியத்தை காக்கத்தான் என்று பல ஈழத்தலைவர்கள் கூறுகிறார்கள். இதை நோக்கும் போது உண்மையான இலட்சியவாதி பேசுகிறானா? இல்லை வடிகட்டிய மூன்றாம் தர தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைகள் பேசுகிறதா? என்று நமக்கு சந்தேகம் ஏற்படுகிறது.

இவ்விரண்டையும் வேறுபடுத்திப் புரிந்து கொள்ள அறிவும் அனுபவமும் நுண்ணறிவும் வேண்டும். பொதுவாக அனேகமான ஈழமக்களிடம் இது அதிகம் இருக்கவில்லை.

இதனால்தான் தலைவர்கள் கடிவாளமில்லாத குதிரைகள் போல் ஈழப்போராட்டத்தின் வெற்றிக்கான வழிமுறைகளை விட்டு அங்கோ திசைமாறி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளும் அறிஞர்களும் சிறந்த தலைமைகளும் மௌனமாக இருப்பது இவர்களுக்கின்னும் வாய்ப்பாகிவிட்டது.

# தமிழீழ தேசமும் தலைவர்களும் (9)

சிங்கள அரசுடன் கூடிக்குலாவி தன் சார்ந்த வர்க்க மக்களுக்கு துணையாக இருந்தார் சேர். பொன். இராமநாதன் [இலங்கை தேசிய காங்கிரஸ்] இவரின் தமிழர் தேசிய மகாசபையை அமுலிய சேர். பொன் அருணாசலமும் அண்ணாவின் வழிமுறையில் சென்று தமது வர்க்க மக்களுக்காக சிங்களவருடன் கூடிச் சேர்ந்து தம் பதவிகளை தக்க வைத்தார்.

இவர்களுக்கு பின் தோன்றிய தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவர்களின் கூட்டணி, அமைத்து, பவனி வந்தார்கள். இவர்களும் தாம் சார்ந்த வர்க்க மக்களுக்கு குடை பிடிக்கும் கட்சியாகவே கூட்டணியை ஏற்படுத்தினார்கள்.

செல்வநாயகம் உட்பட அமிர்தலிங்கம் வரை முதலீட்டு மன்னர்களின் காவலர்களே! இந்தக் கூட்டத்தின் கொள்கைகளை வெளிப்படுத்தி அரசியல் ஆதாயம் தேட புறப்பட்டார் ஈழ பொதுவுடைமைக் கட்சியின் முடிசூடா மன்னன் - வி. பொன்னம்பலம். அவர்கள்.

செல்வநாயகத்தை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டார் வி. பொன்னம்பலம் இருபது அம்ச கோரிக்கையைப் போட்டு குளறுபடி செய்தவர். பொதுவுடைமைக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டு . . .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விலைக்கப்பட்டு "சமியோவில்", அரசியல் அந்நாத வாசம் பூண்டவர். பின்பு தருணத்தைப் பார்த்து வாழ்நாள் கொள்கைகளை காற்றில் வீசிவிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் பதவி ஏற்று ஈழமக்களின் தேசியப் போராட்டத்தையும் வர்க்கப் போராட்டமாக்கினார்.

பலவழிகளிலும் ஈழத்து நடுத்தர-கீழ்மட்ட வர்க்க மக்களை குட்டிச்சுவராக்கி, தாம் சார்ந்த வர்க்க மக்களுக்கு குடை பிடித்தவர்களோ அந்த வர்க்க மக்களின் பதவிகளும் தொழில் புரியும் வாய்ப்பும் ஸ்ரீலங்கா சிங்கள அரசால் பறிக்கப்பட்ட போது அவற்றைப் பெற படாத பாடு பட்டார்கள்.

முடியாது போகவே தாம் சார்ந்த வர்க்கத்தின் நலனுக்காகவே "தனித்தமிழீழம்" என்ற கோஷத்தைப் போட்டார்கள். செல்வநாயகம் பல தோல்விகளைக் கண்டு கலங்கி தனித்தமிழ் நாடே ஒரே வழி! தெய்வமே துணை! என்று சொல்லி மறைந்தார். இந்த செல்வநாயகத்தின் அரசியல் குழிபறிப்புக்களையெல்லாம் கீழ்மட்ட வர்க்க மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். சாதி வெறியர்களான இந்த தலைமைகளை தமிழ்மக்கள் மறக்கக்கூட மாட்டார்கள்!

1977ம் வருடம் செல்வநாயகம் ஊதிச் சென்ற ஈழ சுதந்திர தாகத்தை தாரக மந்திரமாக வைத்து கீழ்மட்ட வர்க்க மக்களின் வோட்டுக்களால் அமோக வெற்றி பெற்று தம் பதவிகளை தக்க வைத்துக் கொண்டார்கள்— அமிர்தலிங்கமும் அவர் சார்ந்த கோஷ்டிகளும்.

அமிர்தலிங்கத்தின் குத்துக்கரணங்களால் தமிழ் இனம் அழிவதைக் கண்டு அதில் தம்மை தலைவர்களாக்கி கிளர்க்காயப் புறப்பட்ட கும்பல்கள் தான். இன்றைய ஆயுதத் தலைமைகள் என்று சொன்னால் அது மிகையில்லை. ஏனென்றால் மேற்கூறிய ஆயுதத் தலைமைகளுக்கு ஸ்தாபகர்களாகவும் சித்தாந்த ஊதிகளாகவும் இருந்த பலரின் குத்துக்கரணங்களை ஆராய்ந்தால் உண்மையில் இவர்களும் அரசியல் ஆதாயம் தேடவே "தமிழீழக் கோஷம்" போட்டார்கள் என்பது தெரியவரும்.

தமிழ் மக்களிடம் தமிழீழ கோஷத்தால், பல ஆயுத தலைமைகளும்...



ஆயுத தலைமைகளும் இவர் சார்ந்த முதலாளிகளும் பல கோடி ரூபாய். வசூலித்து குட்டி முதலாளிகளாகி விட்டார்கள்.


சிங்கப்பூரிலும்
மலேசியாவிலும்
உள்ள தமிழர்களிடம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அம்மையார் ஐம்பது இலட்சம் வெள்ளி சேர்த்து தம் பிள்ளை குட்டிகளுக்கு சொத்து சேர்த்தார்.

மேற்கு ஐரோப்பாவில் வாழும் தமிழ் அகதிகளிடம் சேர்க்கும் பணக்கட்டுக்கள் எப்படியெல்லாம் இவ்வொரு குழுவைச் சேர்ந்த தனி நபர்களின் வாழ்வைக் கிறது என்பதை தமிழ்மக்கள் அறிய வேண்டும்!

இன்று வர்க்க பேதமாக நடக்கும் போராட்டத்தில் ஏமாந்து ஏமாளியானவர்கள் கீழ்மட்ட வர்க்க மக்களே! இனியும் பலர் உங்களை ஏமாற்ற திரண்டு வருவார்கள். அவர்களுக்கும் உங்கள் பொன்னான உழைப்பை வாரி இறைத்து அள்ளி வழங்குங்கள்!
அவர்கள் பாவம் தங்கள் பிள்ளை குட்டிகள் வாழ வைக்க வேண்டும்!

முழித்துக் கொண்டு தூங்கும் ஈழத்து பாட்டாளிகள் என்று தூக்கம் கலைந்து விழித்துக் கொள்கிறார்களோ அன்றே நல்ல தலைமை உருவாக காலம் கனிந்து வரும் அதுவரைக்கும் தமிழீழ கோஷம் போட்டு பல முதலைகள் கண்ணீர் வடிப்பார்கள்!

இவர்களிடம் ஏமாந்தது போதும்!
தமிழ்மக்களே விழித்துக் கொள்ளுங்கள்!



முதலாவது பாகம்
-முற்றிற்று-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# முதலாளித்து-வங்கள்



[அந்த தேயிலைத்
தோட்டத்து லயத்தின்
எழுச்சி பெண்மணி அவள்
இப்படி புலம்பினாள்!]

முதலில்
தாங்கள் நவீனங்களோ
முதலாளித்துவங்கள்
என்ற மூச்சைப்
அவர்கள் இருந்துவிட்டனர்....
நாங்கள்
முகங்களோடு
வழித்த
வியர்வையில்தான்
உங்கள் வீட்டு
காற்றாடி வீசுகிறது....
தேயிலை மரத்து
அட்டைகளைப் போலவே
எங்கள் அடையாளம் தெரியாமல்
உறிஞ்சி விட்டீர்கள்....
அந்த உதிரங்களெல்லாம்
எங்கு ஒளித்தீர்கள்
எங்கள் உதிரங்களுக்கும்
வியர்வைகளுக்கும்
உங்களால் ஏன்
பதில் சொல்ல முடியாமற்
போய்விட்டது....
ஜாதிப்பித்தங்கள்
இன்னும்
இதோ எங்கள்

குடிசைகளை விட
உயர்ந்த உங்கள்
வீடுகளில் வாழ்கிறது...
இன்னும் எங்கள்
கூரை வழியே
நிலவும் சூரியனும்
எங்கள் முகம் பார்க்கிறது!

- காங்கேசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible] வெளியீடு

# தமிழர்கள் எங்கே செல்கிறார்கள்?

(தமிழ்ச் சமுதாயத்தில் நிலவும் எண்ண ஓட்டங்கள்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்